# <u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

OS. No.166/2018 Date: 05.09.2023

PW-2-முத்து

<u>சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனக்கு சாட்சி சம்மன் வரவில்லை. நான் விவசாயம் செய்கிறேன். வாதியை எனக்கு 8 - 9 வருடமாக பழக்கம். பிரதிவாதி வாதியிடம் கடன் வாங்கும் போது இருந்து தான் அவர் எனக்கு பழக்கம். வாதியின் தகப்பனார் பெயர், முகவரி தெரியாது. பிரதிவாதியின் கணவர் பெயர் தெரியாது. கொங்கணாபுரம் சொந்த ஊர். பூலாம்பட்டியில் வசிக்கிறார். பிரதிவாதியின் துணி கடைக்கு நான் போக வர பழக்கம். பிரதிவாதி பூலாம்பட்டியில் பட்டு சீலை வியாபாரம் செய்கிறார். அவருக்கு கவரிங் நகை வியாபாரமும் உண்டு. BSNL அலுவலகத்தில் பணிபுரிகிறார். அதில் என்ன வேலை என்று தெரியாது. அதில் சுமார் 10 வருடமாக வேலை செய்வதாக தெரியும். இந்த விவரங்களை நான் முதல் விசாரணையில் சொல்லவில்லை. பிரதிவாதி வாதியிடம் எப்போது கடன் கேட்டார் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி எனக்கு உறவினர் இல்லை. குடும்ப நண்பரும் இல்லை. எங்கள் ஊர் பூலாம்பட்டியில் இருந்து 7 கி.மீ தூரத்தில் உள்ளது. வாதி பூலாம்பட்டியில் வசிக்கிறார் என்றால் சரிதான். என்னை சாட்சி கையெழுத்து செய்ய பிரதிவாதி தான் அழைத்தார். இந்த விவரங்களை நான் முதல் விசாரணையில் சொல்லவில்லை. துணி வியாபாரத்திற்காக கடன் வாங்கினார். பிரதிவாதி அரசு வேலையில் உள்ளதால் துணி வியாபாரம் செய்ய நேரமும் இல்லை, அவசியம் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி துணி வியாபாரம் செய்வதாக வாதி சொல்லி கொடுத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 தேதி 10.10.2016. என்னுடைய பிறந்த தேதி தெரியாது. என் வீட்டின் கதவு எண்.525. கடன் கொடுத்த தேதி 10.10.2016. ஒரு வருடத்திற்குள் திருப்பி கொடுத்துவிடுவதாக பேசி கடன் வாங்கினார். வா.சா.ஆ.1 ல் நான் மட்டும் தான் சாட்சி கையெழுத்து செய்தேன். வா.சா.ஆ.1 பாபு எழுதினார். அவர் அப்பா பெயர் தெரியாது. நான் கைரேகை வைத்தேன். என் அப்பா

பெயர், முகவரியை பாபு எழுதினார். வா.சா.ஆ.1 யை காலை 11 மணிக்கு வாதி வீட்டில் வைத்து எழுதப்பட்டது. வா.சா.ஆ.1 ற்கான வாசகங்களை பிரதிவாதி தான் சொன்னார். வாதி பிரதிவாதியிடம் எப்போது எங்கு வைத்து பணம் கேட்டார் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு என்னை யார் என்று தெரியாது என்றால் சரியல்ல. வாதி தான் என் பக்கத்து ஊர்காரர் என்பதால் என்னை வைத்து வா.சா.ஆ.1 யை தயார் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொன்ன தேதியில் கடன் கொடுக்கவில்லை என்றாலும், வா.சா.ஆ.1 எழுதவில்லை என்றாலும் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-முத்து

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.